ISSN : 2456-821X **அவையம் 2 (1)** 2018 P.No. : 37-41

புதிய அவையம்

### *சங்க அகப்பாடல்களும் கதைச்சொல்லியின் குரலும்*

***முனைவர் ஆ. சந்திரன்***
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்*
*வேலூர் மாவட்டம்.*

**கட்டுரை பெறப்பட்டது : 15.04.2018** **ஏற்கப்பட்டது : 03.05.2018**

*பண்டைப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பாக விளங்கும் சங்கப் பாடல்கள் திட்டமிட்டு பாடப்பட்டவையாக அல்லாமல், அவை அக்காலப் புலவர்களுடைய உணர்வுகளின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. ஆண், பெண் புலவர்களும் மன்னனும் பாடியவையாக உள்ள இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம் ஒன்று உண்டு. அது அகம் பற்றியது. அகம் புறம் என்று இரண்டாகப் பகுக்கப்பட்டுள்ள பாடல்களில் புறப்பாடல்கள் புலவர்களின் கூற்றுக்களாக இருக்க, அகப்பாடல்கள் தலைவி, தலைவன், தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், கண்டோர் என பலருடைய குரலாக அமைந்துள்ளன. பாடலில் இது தலைவியின் கூற்று, இது தலைவன் கூற்று என்ற பாகுபாடு இல்லாத நிலையில் பாடலின் பின்புலத்தை வைத்து இது இன்னாரின் கூற்று என்று பாடல்களுக்குக் கூற்று வரையறை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய சிந்தனை எவ்வாறு உருவானது? இதை எப்படிச் செய்தார்கள்? என்பன போன்ற வினாக்கள் ஒரு புறமிருக்க உலகில் எந்த மொழியிலும் இல்லாத ஒன்றை நாம் பெற்றிருப்பது வியப்பான ஒன்றாகும்.*

*புறப்பாடல்களில் கூற்று என்பது புலவருடையதாகவே அமைகிறது. ஆனால் அகப்பாடல்கள் கூற்று என்று வரும் போது தலைவன், தலைவி, தோழி என்று கற்பனை பாத்திரங்களின் பொதுக்குரலாக அமைகிறது. அதாவது அகப்பாடல்களில் வெளிப்படும் கூற்று தனிப்பட்ட ஒரு நபரைச் சுட்டாமல் பொதுத்தன்மையில் அமைகிறது.*

அதாவது, அகப்பாடல்கள் புறப்பாடல்கள் போல் புலவர்களால் பாடப்பட்டிருந்தாலும் பாடலில் ஒலிப்பது தலைவன், தலைவி, தோழி அல்லது வேறு ஏதோ ஒரு பாத்திரத்தின் குரலாக இருக்கிறது. அதாவது பாடலாசிரியன் வேறு – பாடலில் ஒலிக்கும் குரல் வேறு என இது அமைகிறது.

பாடப்பட்டுள்ள பாடல்களின் சில அடையாளங்களைக் கொண்டுதான் இது தலைவன் குரல், இது தோழி குரல், இது தலைவி குரல் என்று இனங்காணமுடிகிறது. மேற்கில் தோன்றிய "கதைச்சொல்லியின் குரல்" என்ற இன்றைய நவீன சிந்தனையைப் போன்ற ஒரு சிந்தனை பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர் கொண்டிருப்பது வியப்பாக உள்ளது. யார் இந்தக் கதை சொல்லி. கதாசிரியருக்கும் இந்தக் கதை சொல்லிக்கும் என்ன உறவு என்பது பற்றிய விளக்கம் இங்கு அவசியமாகிறது. "எல்லா இலக்கியப் படைப்புகளும் –எழுத்து ரூபத்தில் இருப்பதால் – அடையாள ரீதியாக சிலவற்றைச் சொல்லும்" இந்த அடையாளங்களில் ஒன்றாக ஒரு குரல் வருவதுண்டு. இந்தக் குரல் ஆசிரியன் குரல் அல்ல. கதைசொல்லியின் குரல்" (தமிழவன்). இந்த விளக்கத்தின்படி பார்க்கும்போது கதை, கதாசிரியனைத் தாண்டி நின்று ஒலிக்கும் குரலாகக் கதைசொல்லி அமைவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. சங்க இலக்கியத்தில் கதைச் சொல்லியின் குரல் பற்றிய சிந்தனை முயற்சி இதுவரை பெரிய அளவில் நடந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சிவத்தம்பியின் சில கருத்துக்கள் இம்மாதிரியான அடையாளக் குரலைக் காணமுடியும் என்பதற்கு வழிகாட்டியாக அமைகின்றன.

"மாவாராதே மாவாராதே" என்ற புறநானூற்றுப் பாடலின் கதையாடலைக் கட்டவிழ்க்கும் அவர் அப்பாடலில் வெளிப்படுவது ஒரு பெண்ணின் ஏக்கக் குரல் என்கிறார். தலைவனின் பிரிவால் வாடும் பெண்ணின் அங்கலாய்ப்பாய் அமையும் அப்பாடல் புறத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். அத்துடன், குறிஞ்சிப்பாட்டின் தோழி வெளிப்படுத்தும் (குறிஞ்.பா.26-29) கருத்தை ஐயப்படும் அவர், சங்க அகமரபைப் போன்று இல்லாமல் பிற்கால கோவை இலக்கியங்களில் வரும் தோழி பேசுவதாக அக்கருத்து அமைவதாகக் குற்றம் சாட்டுகிறார்.

இவ்விரு கருத்துகளும் அவருடைய நுட்பமான வாசிப்பின் வெளிப்பாட்டால் உருவானவை. இவை பாடலின் கருத்தோ அல்லது கதாசிரியன் கருத்தோ அல்ல. இவை கதைசொல்லியின் குரலை அடையாளங் கண்டுகொண்டதால் உருவான கருத்து. அதனால் கதைசொல்லியின் குரல் என்ற சிந்தனையை அவர் முன்வைத்தார் என்பது அன்று இங்கு பொருள். மேற்கில் உருவான அச்சிந்தனையை தமிழ் இலக்கியத்தில் பரிசோதித்தவர் தமிழவன். அதே நேரம் சிவத்தம்பியிடம் அப்படிப்பட்ட சிந்தனை இருந்துள்ளது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

புலவர்களால் பாடப்பட்ட சங்கப் பாடல்களை முழுமையாக இந்தக் கோணத்தில் ஆராய்ந்தால் அகம்-புறம் என்பதைத் தாண்டிய மனித உணர்வுகளின் உண்மை முகங்கள் பல வெளிப்படும். அது போன்ற முயற்சிகளை முழுநேர ஆய்வாளர்கள் செய்ய முன்வரவேண்டும் என்பதே தற்போதைய தேவையாக இருக்கிறது. அதற்கான முன்னோட்டமாக இக்கட்டுரை அமையும் என நம்புகிறேன்.

எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள அகப்பாடலான நற்றிணையில் உள்ள பாடல்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு அவற்றின் அடையாளக் குரல்- அது முன் வைக்கும் கருத்து ஆகியனவற்றை சுறுக்கமாக விளக்க முயல்கிறது இக்கட்டுரை.

அகப்பாடல்களில் புலப்படும் கதைச்சொல்லின் குரல் முன்வைக்கும் கருத்துக்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

தலைவனைச் சந்திக்க முடியாமல் புலம்பித் தவிக்கும் பெண்ணின் ஆதங்கத்தை விவரிக்கிறது நற்றிணை 132 வது பாடல். நெய்தல் வாழ்க்கையை விளக்கும் இப்பாடல் தோழியின் கூற்றில் அமைந்துள்ளது. களவு வெளிப்பாட்டால் தலைவி இற்செறிக்கபடுவாள். இது சங்க அகமரபில் உள்ள ஒன்று. ஆனால் அப்பெண்ணுக்கு இவ்வளவு கடுங்காவல் வைக்கப்படுவது மரபிற்கு மாறான அல்லது நமக்குப் புலப்படாத ஒன்றாக உள்ளது. அதாவது காதல் கொண்ட ஒரு பெண்ணுக்கு "வீட்டிற்குள் நாயும், வீட்டைச் சுற்றி வீரர்களும் காவலுக்கு இருப்பார்கள் என்கிறது"

போர் அமை கதவப் புரைதொறும் தூவ
கூர் எயிற்று எகினம் நடுங்கும் நல்நகர்ப்
பயில்படை நிவந்த பல் பூஞ் சேக்கை
அயலும் மாண் சிறையதுவே (நற்.132: 4-7)

வாயிற் கதவினிடையில் உள்ள துளைகள் தோறும் மழைநீர் தூறலாக வீசிக்கொண்டிருக்க கூரிய பற்களுடைய நாய் நடுங்கியபடி இருக்கும். கதவிற்கு வெளியிலும் காவலர்கள் இருப்பார்கள். காவலர் மற்ற காவலரைச் சரியாக காவல் காக்குமாறு ஒலி எழுப்பிக்கொண்டே இருப்பார்கள். இவ்வாறு தலைவிக்கு வீட்டிற்கு உள்ளும் புறமும் இவ்வளவு அதீதமான காவல் இருக்கும் என்கிறது. இவ்வளவு அடர்த்தியான காவல் தலைவிக்கு வைக்கவேண்டிய தேவை ஏன் எழுந்திருக்கும்? என்ற கேள்வியை நமக்கு கதைசொல்லியன் குரல் எழுப்புகிறது. சங்க அகமரபில் இற்செறிக்கப்படும் தலைவிக்கு தாய் காவல் இருப்பாள். அவள் வாழும் ஊரில் கடுங்காவல் இருக்கும். ஆனால் பாடலில் புலப்படும் காவல் மரபிற்குப் புறமானதாக அமைவதை உணரமுடிகிறது. காதலுக்கு எதிரான எதிர்ப்பின் அளவு வழக்கத்திற்கு மாறானதாக உள்ளதைப் பார்க்கும் போது இதற்கு பொருளாதாரம், சாதி போன்ற பெரிய பிரச்சனைகள் ஏதாவது காரணமாக இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. அப்படி நாம் நினைக்க இடம் உள்ளது. அதற்குச் சான்றாக அமைகிறது நற்றிணை 45 ஆம் பாடல். "இவளோ வலை வீசி மீன் பிடிக்கும் பரதவர் மகள். நீயோ நெடிய கொடிகள் காற்றால் அசைந்தாடும் தெருக்களையுடய பழைய ஊரின்கண் உள்ள செல்வந்தரின் அன்பு மகன்" (நற்-45) என்று சாதியை மையமிட்டு நடக்கும் உரையாடல் நமக்கு அக்காலத்தில் காதலுக்கு அது ஒரு பெருந்தடையாக ஒரு புறம் இருந்துள்ளதை உணர்த்துகிறது. பாடலில் தலைவியை புலவு நாறும் மீனவப் பெண் என்றும், தலைவனை உயர் குடி சார்ந்தவன் என்றும் கூறப்படுவதைச் சுட்டிடும் கதைச் சொல்லியின் குரல், சமூகத்தில் சாதிய சிந்தனையின் வீரியம் எந்த அளவிற்கு இருந்துள்ளது என்பதை விளக்குகிறது. அத்துடன், நல்ல

பண்புகளுடன் வாழும் பெண்கள் உயர் சாதியினரால் ஏமாற்றப் படுவதையும், ஆனால் அந்த மாதிரியான இழிகுணம் தம்முடைய குலத்தைச் சார்ந்த செல்வந்தர்களிடம் இல்லை என்றும் கூறுகிறது.

இங்கு கவனிக்க வேண்டிய இன்னொரு அம்சம் உண்டு. அது தலைவியன் காதல். தலைவி தலைவனின் செல்வச்செழிப்பைக் கண்டு அவன் மீது காதல் கொள்ள வில்லை. ஏனெனில் அவர்கள் குலத்திலும் செல்வந்தர்கள் உள்ளனர் என்ற குறிப்பு இதை தெளிவாக்குகிறது. அப்படியானால் தலைவி தலைவன் மீது கொண்ட காதலுக்குக் காரணம் அவன் அன்புடன் வளர்க்கப்பட்டவன். அதனால், அவன் தன்னிடம் அன்புடன் இருப்பான் என்று நம்பினாள். ஆனால் அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. தலைவன் அவளை அவ்வாறு நோக்கவில்லை என்கிறது கதைச்சொல்லி. அத்துடன், இப்பாடலில் ''மீன் எறி பரதவர் மகள்'' என்று தலைவி சுட்டப்படுவதும் ''நியம மூதூர்க் கடுந்தேர்ச் செல்வன் காதல் மகன்'' என்று தலைவன் சுட்டப்படுவதும் ''மீனவர்களில் செல்வந்தர்களும் உள்ளனர்'' என்பதும் சாதிய சிந்தனையை வெளிக்காட்டுகிறது. அதாவது, அக்கால சமூகத்தில் உயர்வு தாழ்வு என்பது பொருளாதாரத்தைத் தாண்டியதாகவும், சாதியை அடிப்படையாகக் கொண்டும் அமைந்துள்ளதை இது உணர்த்துகிறது.

இன்னொரு பாடலில் வெளிப்படும் கருத்தைப் பார்ப்போம். தலைவனுடன் உடன்போக்குச் செல்லத் தலைவி தயாரானாள். இல்லத்தைவிட்டு நீங்கும் போது அவள் அணிந்திருந்த சிலம்பைக் கழற்றினாள். அதை உரிய இடத்தில் வைக்கச் சென்றபோது அவளுக்குத் தோன்றியது ''என் தோழிமார் இவற்றைக் காணும்போதெல்லாம் நோவார்கள், அவர்கள் இரங்கத்தக்கவர்கள்'' (நற்.12) அதனால் அவள் உடன்போக்கை தவிர்த்து விடுகிறாள். எனவே, தலைவனே உடன்போக்கைத் தவிர்த்துவிட்டு தலைவியைத் திருமணம் செய்துகொள் என்று தோழி வற்புறுத்துகிறாள். இப்பாடலில் நாம் கவனிக்க வேண்டிய விசயம் ''தலைவி தன்பிரிவால் தோழிகள் வருந்துவார்கள் என நினைப்பதும், அவர்களுக்காக அவள் பரிதாபப்படுவதும், அவர்கள் வருந்துவார்கள் என்பதற்காக உடன்போக்கைத் தவிர்த்துவிடுதும்''. உடன்போக்குச் செல்லமுயலும் தலைவி அதனால் தாய் அடையும் வேதனை பற்றியோ அல்லது ஊரார் எழுப்பும் அலர் பற்றியோ வருத்தப்படாமல் ஏன் தோழிகளுக்காக வருந்த வேண்டும்? உடன்போக்கை நிறுத்தவேண்டும்? என்ற வினாக்கள் இங்கு எழுகின்றன. அத்துடன், இவை மேலே பார்த்த கருத்துக்களுக்கு வலுசேர்ப்பதாக அமைகின்றன.

குறிஞ்சி நிலத்தலைவனுடன் காதல் கொண்ட ஒரு தலைவி, ஏதோ காரணமாக அவனை ஏற்க மறுக்கிறாள். அவ்வாறு தலைவனின் செயலால் வேதனை அடைந்த தலைவிக்குத் தோழி இவ்வாறு அறிவுரை கூறுகிறாள். ''அறிவுமிக்க சான்றோர் தம்மொடு நட்புக் கொள்ள விரும்பியவர்களின் குணங்களை முதலில் ஆராய்ந்து பார்த்து பின்பு நட்புக் கொள்வர். அஃதல்லாமல் நட்புக் கொண்ட பிறகு அவர்தம் குணங்களை ஆராயமாட்டார்கள். நீ அவ்வாறு மலைகிழவனோடு நட்புக் கொள்ளவில்லை. முதலில் நட்புசெய்து இப்போது வெறுத்தல் தகாது'' (நற்32) எனத் தோழியின்

*குரலாக வெளிப்படும் இது பெண்ணுக்கு எதிரான சமூகத்தின் சார்பு மனநிலையைக் காட்டுகிறது. அதாவது, ஒரு பெண் தான் காதல்கொண்ட ஆண் எப்படிபட்டவனாக இருந்தாலும் அதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் அவனுடன்தான் தொடர்ந்து சேர்ந்து இயங்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டை விதிக்கிறது. இப்பாடலில் ஒலிக்கும் தோழியின் குரல் சங்க அகமரபை வெளிக்காட்டுவதாக தோன்றவில்லை. இவ்வாறு "கதைசொல்லியின் குரல் என்ற அடையாளத்தைக் கொண்டு சங்கப்பாடல்களை வாசிக்கும் போது பாடலின் பின்புலத்திலுள்ள செய்திகளை நாம் அறியமுடியும். அத்துடன், வரையறை செய்துள்ள "கூற்று" என்ற அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அகம் என்ற போர்வையில் மறைந்திருக்கும் பல உண்மைகளை மீட்டெடுக்கவும் வழிவகுக்கும் என நம்பலாம். சோழ நாட்டின் வளத்தையும் கரிகால் பெருவளத்தானின் சிறப்புகளையும் விதந்து கூறும் பட்டினப்பாலை பாடலில் புலப்படும் கதைசெல்லியின் குறல் வேறொரு புதிய தளத்தை நோக்கி நம்மை அழைத்துச் செல்வதாக உள்ளது. தமிழவன் அறிமுகம் படுத்தும் கதைசொல்லியின் குரல் என்பதன் மூலம் சாதி, பாலினம், .... போன்ற வரையறையை அது விரிவுபடுத்துவதாக உள்ளது. அது அதிகார வர்க்கத்தின் முகத்திரையை கிழிப்பதாக உள்ளது.*

*"திருமாவளவன் என்றும் கரிகால் பெருவளத்தான் என்றும் புகழப்படும் சோழ மன்னன் சிறுவனாக இருக்கும் போதே தன்னுடைய அரசுரிமையை முறைப்படிப் பெற்றான், அதன் பிறகு தன்னுடைய கன்னிப்போரை வெற்றிகரமாக நடத்தி முடித்தான்" என்று அவனுடைய சிறப்பைக் கூற ஆரம்பிக்கும் பாடலாசிரியர் தன்னுடைய நாட்டு எல்லையை விரிவாக்கினான், மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்தினான் என்று விவரிக்கிறார்.சோழனின் இத்தகைய சிறப்புகளைப் பற்றிய பதிவில் வெளிப்படும் கதைசொல்லியின் குரல் அவனுடைய அதிகார சிந்தனையையும், நிலக்குடிகள் மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தி இருப்பதையும் நமக்கு விளக்குகிறது.*

*போர் என்று வருகிறபோது உயிர் இழப்பு தவிர்க்க இயலாத ஒன்று என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அத்தகைய ஒரு நிலை இந்தப்பாடலில் வெளிப்படையாகவே உள்ளது. உதாரணத்திற்குப் போரில் தோற்ற வீரர்களின் மனைவிகளை அடிமைகளாக பயன்படுத்தியமை, (246-51) பகைவர்களின் செல்வ வளமிக்க ஊர்கள் வளமற்று மக்கள் வாழ்வதற்குத் தகுதி அற்றதாக மாறியமை (252-61) போன்றவற்றைக் கூறலாம். ஆனால் "புன் பொதுவர் வழி பொன்ற" மற்றும் "காடு கொன்று நாடு ஆக்கி" (283) என முல்லை நில மக்கள் மற்றும் பிற நிலக்குடிகளின் வாழ்விடங்களை அழித்த செய்தி முக்கியமாக கவனிக்கப் படவேண்டிய ஒன்றாக உள்ளது.*

*இவ்வாறு கதைச்சொல்லியின் குரல் துணையுடன் நுட்பமாக ஆராய பாடல்களில் அகம் என்ற போர்வையில் மறைந்துள்ள பல உண்மைகளை வெளிக்கொணரலாம்.*



பதிப்பு அகமம்